[1996 ஆகஸ்ட் 22

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவருக்குப் பதில் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் நான் சொன்னவையிலேயே இதற்கான பதில் அடங்கி இருக்கிறது. புறநகர்ப்பகுதிக்கு பேருந்துகள் விரிவாக்கப்படும்போது அவர் சொன்ன நெரிசல்கள் எல்லாம் குறைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 215, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

215—

தமிழ்மொழியை உயர் தனிச் செம்மொழியாக அறிவித்தல்

***160—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் :**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உயர்தனிச் செம்மொழியாக (Classical Language) தமிழை அறிவிக்க அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ் மொழியை உயர் தனிச் செம்மொழியாக, "கிளாசிக்கல் லாங்க்வேஜ்" என அறிவிப்பதற்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களுக்கு, அவராகவே நேரடியாக கடிதங்கள் எழுத இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் விரைவில் அதற்கான தீர்வுகள் கிடைக்கும்.

டாக்டர் இ.எஸ்எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கூட 'தினமணி'யிலே தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். வடமொழிக்கு சற்றும் குறைவில்லாத உபநிடதங்கள், வேதங்கள் ஆகியவற்றுக்கும் மேலாக, ஈடாக உள்ள தேவாரம், திருவாசகம் ஆகியவைகளைக் கொண்டிருக்கிற தமிழ் மொழியை, தொன்மையான

1996 ஆகஸ்ட் 22]

தமிழ் மொழியை, உயர் தனிச் செம்மொழியாக அறிவிக்க, இந்த அரசு ஏதாவது காலவரையறை,-'டைம் லிமிட்'—அறிவித்து செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல, மத்தியிலே தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கு இந்த மன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் கேட்ட கேள்விக்கே இடமில்லை. காரணம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதே போல ஒரு மாதத்திற்கு முன்னாலேயே, நேரடியாகத் தொலைபேசியில் அழைத்து உடனடியாக மடல் எழுதச் சொன்னார்கள். அதன் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுடைய முன்னாள், இந்நாள் துணை வேந்தர்களைக் கொண்ட வல்லுநர் குழு கூட்டப்பட்டு, அதன் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்டுத் தலைமை அமைச்சருக்கு கடிதம் எழுதப்பட்டுவிட்டது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அடிப்படையில் தினமணி தலையங்கங்கள் முன்னும் சரி, இன்றும் சரி, பெரிதும் துணை நின்றதற்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 216, திரு. ஆர். மகேந்திரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

216—

பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்துதல்

***575—திரு. ஆர். மகேந்திரன் :**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளியில் ஓர் பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.